புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.S.N.சியாமளா.,

உத்தரவு

ந.க.எண். 11086/2023/எப்1 **நாள் :19.03.2024**

பொருள்..	மனைப்பிரிவு – புதுக்கோட்டை நகராட்சி – புதுக்கோட்டை வடக்கு கிராமம் சர்வே எண். 39/4, 1.15 ஏக்கர் (4650.ச.மீ) பரப்பளவு இடத்திற்கு 26 மனைகள் கொண்ட மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.
பார்வை ..	1. உறுப்பினர் செயலர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் /நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.1225/2023/புமா., நாள்:27/10/2023. 2. நகர்மன்ற தீர்மானம் எண். 619, நாள்:05.03.2024. 3. மனுதாரர் திரு. இளங்கோவன்.,உரிமையாளர், திரு.N.சக்கரை முகமது (Power Agent) அவர்களது விண்ணப்பம் 01.12.2023.

******

உத்தரவு :

பார்வை 1ல் கண்டுள்ள செயல்முறை உத்தரவில் புதுக்கோட்டை நகராட்சி புதுக்கோட்டை வடக்கு கிராமம் சர்வே எண். 39/4 ,இடத்தில் 1.15 ஏக்கர் (4650.ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம், புதுக்கோட்டை அவர்களால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/உ.செ.(பு.கூ.உ.தி.கு) எண்:110/2023 என தொழில் நுட்ப அனுமதியும், திட்ட அனுமதி எண்.19/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அடங்கிய சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக தான்ப்பத்திரம் எண் 7165/2023 நாள்19.10.2023ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிக்கு மனைப்பிரிவு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரது இணைய வழி சேவை வழியாக (S.R.No.109/CP/23-24/0028133) விண்ணப்பித்து நகராட்சிக்கு செலுத்தவேண்டிய உரிய கட்டணங்கள் ரூ.51,950/. மனைப்பிரிவு சாலை பராமரிப்பு வைப்புத் தொகை கட்டணம் ரூ.2,00,000/. மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.42,000/ செலுத்தியுள்ளார்கள்.

பார்வை 1ல் கண்ட உறுப்பினர் செயலர் / துணை இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை புதுக்கோட்டை அவர்களின் உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

19/3/24

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி

19/3/2024

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர் : திரு. இளங்கோவன்
N. சக்கரை முகமது (Power Agent)
எண் 150 நிஜாம் காலணி
புதுக்கோட்டை மாவட்டம்

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை
நகல் : இணை சார்பதிவாளர், புதுக்கோட்டை.
நகல் : நகராட்சி பொறியாளர், புதுக்கோட்டை நகராட்சி
நகல் : வருவாய் அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி
நகல் : துப்புரவு அலுவலர், புதுக்கோட்டை நகராட்சி